செ.வெ.எண்:130 நாள்:28.02.2018

திருநெல்வேலி பாளையங்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கம் அலுவலர்களுக்கான பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

----

திருநெல்வேலி பாளையங்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கம் அலுவலர்களுக்கான பயிற்சி இன்று (28.02.2018) நடைபெற்றது. பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட மத்திய, மாநில அரசுகளின் மூலம் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கம் சிறுதானிய பயிர்கள் மற்றும் பயிறு வகை பயிர்கள் உற்பத்தியினை பெருக்கிடும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தொகுப்பு அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே நிலை - 1 அடிப்படையில் ஆலங்குளம், கடையநல்லூர், சங்கரன்கோவில் மற்றும் மேலநீலிதநல்லூர் வட்டாரங்களில் 5000 எக்டேர் பரப்பில் 5 தொகுப்புகள் செயல்படுத்தப்பட்டது. உழுந்து 4300 எக்டேர் பரப்பிலும், மக்காச்சோளம் 700 எக்டேர் பரப்பிலும் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டது. செயல் விளக்கங்களுக்கு ரூ.72 லட்சம் மானியத்தில் விதைகள், விதை நேர்த்தி மருந்து, உயிர் உரங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டது.

மேலும் வாடகை இயந்திர மையங்கள் ஒவ்வொரு தொகுப்புக்கும் ஒன்று வீதம் ஐந்து தொகுப்புகளுக்கும் ஐந்து எண்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.40 இலட்சமாகும். மேலும் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் ஊட்டச்சத்து, இனப்பெருக்க தொகுப்புகள் மற்றும் மடி சுகாதாரம் ஆகிய இனங்களில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பண்ணை உற்பத்தி குழுக்களுக்கு மதிப்பு கூட்டு இயந்திரங்கள் ரூ.10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிலை - 2ன் கீழ் குருவிகுளம் வட்டாரத்தில் 6 தொகுப்புகளும், சங்கரன்கோவில் வட்டாரத்தில் 2 தொகுப்புகளும், மேலநீலிதநல்லூர் வட்டாரத்தில் 2 தொகுப்புகளும் ஆக மொத்தம் 10 தொகுப்புகள் செயல்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு தொகுப்புகளும் 1000 ஏக்டேர் பரப்பில் மொத்தம் 10000 எக்டேர் பரப்பில் அமைக்கப்படுகிறது. இவ்வட்டாரங்களில் உளுந்து 6300 எக்டேர் பரப்பிலும், மக்காச்சோளம் 3700 எக்டேர் பரப்பிலும் செயல்விளக்கங்கள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தினை சிறப்பாக விவசாயிகளுக்கு எடுத்து சென்று களப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் பயன்கள் முழுமையாக விவசாயிகளுக்கு சென்று விவசாயிகள் பயன்பெறும் வகையில் அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள், அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் திரு.ஆறுமுகச்சாமி, மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, வேளாண்மை துணை இயக்குநர்கள் (உழவர் பயிற்சி நிலையம்) திரு.பாலசுப்பிரமணியன், (வேளாண் வணிகம்) திரு.நாகராஜன், (மாநில திட்டங்கள்) திரு.முகைதீன், (மத்திய அரசு திட்டங்கள்) திரு.உத்தண்டராமன், மற்றும் குருவிகுளம், சங்கரன்கோவில், மேலநீலிதநல்லூர், ஆலங்குளம், கடையநல்லூர் உள்ளிட்ட ஒன்றியங்களின் வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.